பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி 13 வியாழக்கிழமை 26.03.2020 கதிர் 141

## இனி இது ரகசியம் அல்ல!

முக்கியபிரமுகர்களின்- குறிப்பாக ஜனாதிபதி, பிரதமர், மூத்த அமைச்சர்கள், அவர்களுடன் நெருங்கிப் பழகுகின்ற அதிகாரிகள், உறவினர்கள் போன்றோர் விடயத்தில் மெய்ப் பாதுகாவலர்களின் பொறுப்பு 02

# கிராமியச் சந்தைகளை நிறுவி தொற்றைத் தடுக்கத் திட்டம்!

## மக்கள் கூட்டத்தை வெகுவாகக் குறைத்து தாக்கத்தைக் கட்டுக்குள் வைக்க முயற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 27

திருநெல்வேலி, மருதனார்மடம் உள்ளிட்ட பெரும்பலான பொதுச் சந்தைகளை பரவலாகப் பிரித்து, கிராமிய சந்தைகளாகவும் வீதிகளில் கூடும் சந்தைகளாகவும் முன்னெடுப்பது என்று பிரதேச சபைகளால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 02

## வங்கிகளை திறந்திருக்க ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, மார்ச்26

கொடுக்கல் - வாங்கல்களையும், அத்தியாவசிய தேவைகளையும் கருத்தில் கொண்டு நாடு தழுவிய ரீதியில் உள்ள சகல வணிக வங்கிகளையும் திறந்து வைக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வங்கிகளின் 02

## அனைத்து விஸாக்களும் நிறுத்தம்!

கொழும்பு, மார்ச் 27

இலங்கைக்கு வருகை தருவதற்காக வழங்கப்பட்ட அனைத்து வகையான விஸாக்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று குடிவரவு, குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, அனைத்து வகையான இலத்திரனியல் பயண அங்கீகாரங்கள், நுழைவு விசாக்கள், வருகைதரு அங்கீகாரங்கள், பல 02

## புதிதாக யாருக்கும் தொற்று இல்லை!

கொழும்பு, மார்ச் 26

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடையவர்கள் யாரும், நேற்று முன் தினம் இரவில் இருந்து நேற்று இரவு வரைக் கண்டறியப்படவில்லை எனச் சுகாதார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

இதுவரை கொரோனா தொற்று சந்தேகத்தில் 255 பேரும், கொரோனாத் தொற்று உடையவர்களாக 102 பேரும் இனங் காணப்பட்டனர். அதிலும் மூன்று பேர் குண 02

## ஊரடங்கு வேளை சந்தைகளை மூட உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ். மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் போது பிரதான சந்தைகள் மூடப்படும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் அறிவித்துள்ளார்.

இதற்கு மாற்றீடாக பொது மைதானங்கள், பொது இடங்கள் போன்றவற்றில் பரந்த 02

## வடக்கில் நாளை ஊரடங்கு 6 மணி நேரம் நீக்கப்படும்!

### அபாய வலயத்தில் தளர்வில்லை

கொழும்பு, மார்ச் 26

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்கள் மற்றும் புத்தளம் மாவட்டத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு தளர்த்தப்படும் ஊரடங்கு நணபகல் 12 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களான அபாய வலயத்தில் மறு அறிவித்தல் வரை ஊரடங்கு 02

## பல்கலை அதிகாரி கைது!

இலங்கையில் கொரோனா தொற்றினால் 10 பேர் உயிரிழந்துள்ளனர் என்று போலித் தகவல்களை பேஸ்புக்கில் வெளியிட்ட மாலபே பகுதியில் உள்ள தனியார் பல்கலைக்கழகத்தின் அதிகாரியொருவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (முதலில் வந்த செய்தி 8ஆம் பக்கத்தில்)

## மக்கள் நகர்வைக் கட்டுப்படுத்த அறுநூறு சோதனைச் சாவடிகள்



கொழும்பு, மார்ச் 26

கொரோனா வைரஸ் பரவலை தடுக்கும் விதமாக மக்களின் இடநகர்வுகளை கட்டுப்படுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதன்படி இலங்கையில் சுமார் 600 சோதனைச்சாவடிகள் உடனடியாக அமைக்கப்படவுள்ளன. அத்ச்ன் மூலம் 02

## ரஷ்யப் பிரஜை உட்பட ஐவர் வைத்தியசாலையில் அனுமதி

கொழும்பு, மார்ச் 25

கொரோனா தொற்றுக்கு உள்ளாகியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில், ரஷ்யப் பிரஜை உள்ளிட்ட ஐவர், காலி, கராப்பிட்டிய போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலையின் தகவல்கள் 02

## சுகமடையும் நால்வர் விரைவில் வீடுகளுக்கு

கொழும்பு, மார்ச் 26

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகிய சிகிச்சை பெற்று வரும் 99 பேரில் 02

## பனிச்சங்கேணி கொரோனா தடுப்பு முகாம் காலியானது!

மட்டக்களப்பு, மார்ச் 27

மட்டக்களப்பு, வாகரை பனிச்சங்கேணி கொரோனா தடுப்பு முகாமில், கடந்த 14 நாள்களாக மருத்துவக் 02

## போலிச் செய்திகளை நம்பாதீர்கள் மக்களே!

கொழும்பு, மார்ச் 27

சமூக வலைத்தளங்களில் மற்றும் உடனடி தகவல் சேவைகளாக வைபர், வட்ஸ்அப் செயலிகளில் வெளியிடப்படும் போலிச் 02

விபரம் 10 ஆம் பக்கத்தில்...
காலைக்கதிர்
Kalaikkathir
வரைவோம் வாருங்கள்!
பொழுதைக் களிப்போடு கழிப்போம்
பரிசுகளையும் வென்றிடுவோம்!
Scan Here

அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
உங்களின் நிலை அறிந்து நாங்கள் உதவுகிறோம்!
அத்தியாவசிய, அவசர அறிவித்தல்கள் இலவசம்!
ஏனையவை மிகக் குறைந்த கட்டணத்தில்!!
வீட்டில் இருந்தவாறே உங்கள் தேவைகளையும் தகவல்களையும் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள். தினமும் காலையும் மாலையும் ஊரில் மட்டுமல்ல உலங்கெங்கும் வாழும் பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் கைபேசிகள் மற்றும் கணினிகளில் தவழும் காலைக்கதிர் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரியுங்கள்.
மிகக் குறைந்த கட்டணங்கள்
விளம்பரங்களை இப்பொழுது பிரசுரியுங்கள்!
பின்னர் கட்டணத்தைச் செலுத்தலாம் !!
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மிகப் பாரியதாக அதிகரித்து விட்டிருக்கின்றது.

இவ்வளவு காலமும் கண்ணுக்குத் தெரியக் கூடிய எதிரிகளிடமிருந்துதான் முக்கிய பிரமுகர்களைப் பாதுகாக்கும் கடப்பாடு இருந்தது. இப்போது கண்ணுக்குத் தெரியாத - எப்படி நுழைந்து தாக்கும் என்று கற்பனை பண்ண முடியாத - அற்ப வைரஸிடமிருந்து பிரமுகர்களைப் பாதுகாப்பது எப்படி என்ற மலைப்பு அவர்களுக்கு.

இந்தக் கொரோனா வைரஸ் தாக்குதலைப் பொறுத்தவரை பாதுகாப்புத்துறை இரண்டு வகைச் சிக்கல்களை எதிர்நோக்குகின்றது.

ஒன்று - தாம் வைரஸ் காவிகள் என்று தங்களுக்கே தெரியாத தரப்புகள் சம்பந்தப்பட்ட பிரமுகருடன் ஊடாடும் போது, எந்தத் தரப்புக்கும் தெரியாமலேயே அந்தப் பிரமுகரை கொரோனா பீடித்து விடலாம் - பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸைப் பீடித்த மாதிரி. இப்படித் தொற்றைக் கொடுப்பவர் அந்தப் பிரமுகரின் உதவியாளராகவோ, ஊழியராகவோ, அதிகாரியாகவோ அல்லது ஏன் மெய்ப்பாதுகாவலராகவோ கூட இருக்கலாம். அவர்கள் மூலம், அவர்களுக்கே தெரியாமல் கொரோனா அந்தப் பிரமுகரை எட்டி விடலாம். அல்லது அவர்கள் பயன்படுத்திய பொருள்கள், தொட்டுப் பழகிய இடங்கள், தளபாடங்கள், ஏன் ஆவணங்கள், தஸ்தாவேஜுக்கள், கடிதங்கள் போன்றவையாகக் கூட இருக்கலாம்.

அதேசமயம், மறுபக்கத்தில் - தரப்புகள் தெரிந்தே ஒரு கொரோனா நோயாளியை நெருங்கிப் பழகச் செய்து பிரமுகரைப் பாதிப்புற வைக்கலாம். ஓர் உயிரியல் ஆயுதமாக (Bio - weapon) பயன்படுத்தக் கூடிய வைரஸாக கொரோனா உருவெடுத்திருக்கின்றது என்பது மறுக்கக் கூடியதல்ல.

அதனால், பிரமுகர்களின் மெய்க்காவலர்களுக்கு யாரை, எந்த இடம் வரை நெருங்க அனுமதிக்கலாம் என்ற குழப்பம் வேறு.

ஜனாதிபதி, பிரதமர் போன்ற தரத்தில் உள்ளவர்கள் இப்போதெல்லாம் பெரும்பாலும் தொலைபேசி, காணொலி போன்றன ஊடாகத்தான் கலந்துரையாடல்கள், கூட்டங்கள், சந்திப்புக்கள் போன்றவற்றை முன்னெடுக்கின்றார்கள்.

பெரியவர்களை நேரில் சந்தித்துச் செய்திகளை 'பிடுங்குவது' அல்லது நைஸாகப் போட்டுக் கொடுத்து வாங்குவது போன்ற 'செய்தி துருவும்' எமது சில தந்திரோபாயங்கள் இன்னும் சற்றுக் காலத்துக்கு எம் போன்றவர்களுக்கு சித்திக்கவே போவதில்லை என்பது மட்டும் நிச்சயம். தொலைபேசியில் என்னதான் நோண்டினாலும், பிரமுகர்களை நேரில் சந்தித்து, 'போட்டுக்கொடுத்துப் பிடுங்குவது' என்பது எம் போன்றவர்களுக்கு சற்றுக் காலத்துக்கு வாய்க்காது என்பது மட்டும் சிச்சயம்.

★ ★ ★

இலங்கையில் அரசின் - ஆட்சித்தலைமையின் - 'கொரோனா கொண்ட்ரோல் ஒபரேசன்' முழு அளவில் ராஜபக்ஷக்களின் குடும்ப விவகாரமாகி விட்டது என்று ஆளும் தரப்பில் முக்கியஸ்தர் ஒருவர் நேற்று என்னிடம் தொலைபேசியில் குறைப்பட்டுக் கொண்டார்.

அதன் விவரத்தை நாளை பார்ப்போம் நண்பர்களே...!

- மின்னல் -

## ரஷ்யப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தெரிவிக்கின்றன.

மேற்படி ஐவரும், கராப்பிட்டிய வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சைக்கான விசேட பிரிவில், நேற்று முன்தினம் மாலை அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிய வருகிறது.

அவர்கள், தாய்லாந்தில் இருந்து நாட்டுக்குச் சுற்றுலா மேற்கொண்டவர்கள் என்றும் மிரிஸ்ஸ பிரதேசத்திலிருந்து வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

இவ்வாறு அனுமதிக்கப்பட்டவர்களில் மூவர் இலங்கையர்கள் என்று தெரியவருகிறது. (ஐ)

## வங்கிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பிரதானிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

வர்த்தகம் மற்றும் பிற அத்தியாவசிய நடவடிக்கைகளை எளிதாக்கும் நடவடிக்கையாக இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தளர்த்தப்பட மாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஏனைய 16 மாவட்டங்களில் நாளை காலை 6 மணிக்குத் தளர்த்தப்படும் ஊரடங்கு நண்பகல் 12 மணிக்கு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி செயலகம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நாடு முழுவதும் தற்போது நடைமுறையில் இருக்கும் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுதல் மற்றும் மீண்டும் நடைமுறைப் படுத்தல் பின்வருமாறு மேற்கொள்ளப்படும்.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் தற்போது நடைமுறையில் உள்ள ஊரடங்கு சட்டம் மீண்டும் அறிவிக்கும் வரை நடைமுறையில் இருக்கும்.

புத்தளம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் தற்போது நடைமுறையில் இருக்கும் ஊரடங்கு சட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு நீக்கப்பட்டு, அன்றைய தினம் நண்பகல் 12 மணிக்கு மீண்டும் நடைமுறைப் படுத்தப்படும்.

ஏனைய மாவட்டங்களில் தற்போது நடைமுறையில் உள்ள ஊரடங்கு சட்டம் இன்று வியாழன் காலை 6 மணிக்கு நீக்கப்பட்டு, இன்று நண்பகல் 12 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும். (ஐ)

## பனிச்சங்கேணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கண்காணிப்பில் வைக்கப்பட்டவர்கள், தொற்று இல்லாத நிலையில் நேற்றுக் குடும்பத்தாருடன் இணைய அனுமதிக்கப்பட்டனர்.

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஒவ்வொரு பிரதேசத்தையும் விட்டு, மறு பிரதேசத்திற்கு மக்களின் இடமாற்றம் கட்டுப்படுத்தப்படவுள்ளது.

கொரோனா சந்தேகநபர்கள் சிலர் பொறுப்பற்ற விதமாக பல இடங்களிற்கும் நடமாடியமையால் வைரஸ் தொற்று பல இடங்களிற்கும் பரவியிருக்கலாமென கருதப்படுகிறது. இதனால் மக்களின் நகர்வைக் கட்டுப்படுத்த பிரதேச ரீதியாக சோதனைச்சாவடிகள் அமைக்கப்படவுள்ளன.

## அனைத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நுழைவு விசாக்கள், குடியிருப்பு விஸாக்கள் (Electronic Travel Authorizations‡ETA, Entry Visas, Landing Endorsements, Multiple Entry Visas, Residence Visas) உள்ளிட்ட ஏற்கனவே வழங்கப்பட்ட அனைத்து நாடுகளுக்குமான விஸாக்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஊரடங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வெளியில் வியாபாரங்களை நடத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பணத்தில் வறிய குடும்பங்கள், சமுர்த்தி பெறும் குடும்பங்கள் ஆகியோருக்கு அத்தியாவசிய பொருள்களை இலவசமாக வழங்குவதற்கான அத்தனை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும், மாவட்டத்துக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு வருவதற்கு சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அதனை வணிகர் கழகம் முன்னெடுத்து வருகின்றது.

கொழும்புக்குச் சென்று அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வருபவர்களுக்கு விசேட பாஸ் வழங்கப்படுகின்றன. அவ்வாறு பாஸ் எடுத்து பொருள்களை ஏற்றிச் செல்பவர்களுக்கு சில அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

பொருள்களை ஏற்றிச் செல்லும் லொறிகளில் எந்த மாவட்டம், என்ன பொருள்கள் போன்றவற்றைக் காட்சிப்படுத்த வேண்டும். மேலும் முக்கியமாக செல்லும் வாகனங்களில் அத்தியாவசிய தேவைகள் சேவை என பெயரிடப்பட்டு செல்ல வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கடற்றொழிலாளர்களுக்கும் தற்போது தொழில் செய்வதற்கான ஏற்பாடுகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பணத்தில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் போது பொதுச் சந்தைகளில் மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதில் பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றோம்.

எனவே பொதுச் சந்தைகள் தொடர்பாக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரை அழைத்துப் பேசி சில முடிவுகள் எடுத்துள்ளோம். மேலும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் போது பொது மக்கள் வீடுகளில் இருந்தவாறே அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஐ)

## புதிதாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மாகி வீடு திரும்பியதால் எண்ணிக்கை 99 ஆகக் குறைந்துள்ளது.

மேலும், வடபகுதியில் யாழ். போதனா வைத்தியசாலையில் கொரோனா தொற்று சந்தேகத்தில் அனுமதிக்கப்பட்ட 7 பேருக்கும் கொரோனா தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (ஐ)

## கிராமியச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இது தொடர்பில் வலி. தெற்கு பிரதேசசபைத் தவிசாளர் க.தர்ஸன் அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் அடையாளம் காணப்பட்ட முதலாவது கொரோனா தொற்றுக்குள்ளானவர் எமது வலி தெற்குப் பிரதேச சபை எல்லைக்குள் வசித்து வருவதனால் நோய்த் தொற்றை கட்டுப்படுத்தும் செயற்றிட்டத்திற்கு எமது சபைக்கும் பெரும் கடப்பாடு உள்ளது.

எனவே எமது மக்களின் நலன் பேணும் நோக்கில் பல வேறுபட்ட காத்திரமான நடவடிக்கைகளை எனது நேரடிக் கண்காணிப்பில் பிரதேச சபை மேற்கொள்ளவுள்ளது.

கடந்த ஊரடங்கு தளர்வின் போது எமது பொதுச் சந்தைகளில் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு சனநெரிசல் இருந்தமை கொரோனா தொற்று வேகமாக பரவக்கூடிய ஏது நிலையை உண்டாக்கும் என்று சுகாதாரத் தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான சனநடமாட்டத்தையும் நெரிசலையும் குறைப்பதற்கு நாம் சுகாதாரத் துறையினருடனும் பாதுகாப்புத் தரப்பினருடனும் இணைந்து சில நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

அதன்படி ஊரடங்கு நடைமுறையில் இருக்கின்ற போதே எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஒவ்வொரு கிராமங்கள் தோறும் பொலிஸாரின் அனுமதியுடன் சுகாதாரத் துறையினரின் கண்காணிப்பில் கிராமச் சந்தைகள் அமைக்கப்படவுள்ளன. எனவே அத்தியாவசிய பொருள்கள் தேவையானவர்கள் மட்டும் இந்தச் சந்தைகளுக்குச் சென்று மரக்கறிகள் மற்றும் பலசரக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்று முதல் கிராமச் சந்தைகள் இயங்க ஆரம்பிக்கும். சந்தைகள் இயங்கவுள்ள இடங்கள் பற்றி எமது சபைக்கு உட்பட்ட பிரதேசங்கள் முழுவதுமாக ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சுகாதாரதுறையினரின் அறிவுறுத்தல்களான கையுறை மற்றும் முகக் கவசம் (மாஸ்க்) அணியாமல் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டால் என்னிடம் அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிடம் உடனடியாக முறையிடுங்கள்.

அது மட்டுமின்றி உங்கள் பகுதிகளில் மேலதிக அத்தியாவசிய வசதிகளோ சுகாதார வசதிகளோ ஏற்படுத்தப்பட வேண்டியேற்பட்டால் உடனடியாக 0777336361 என்ற இலக்கம் ஊடாக என்னைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

வலி. தெற்கு பிரதேச மக்கள் என்ற ரீதியில் நாம் அனைவரும் குறிப்பிட்ட நாள்களுக்கு எமது வீடுகளை விட்டு வெளியேறாமல் பொறுப்புணர்வுடன் செயற்படுமாறு உரிமையோடு கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது.

அதேவேளை, நல்லூர் பிரதேச எல்லைக்கு உட்பட்ட பிரதான பொதுச் சந்தையான திருநெல்வேலிச் சந்தை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் போது இடமாற்றம் செய்யப்பட்டு நுழைவாயில் வீதிகளில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நல்லூர்ப் பிரதேச சபையின் தவிசாளர் த. தியாகமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பணத்தில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் போது நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் இருக்கும் திருநெல்வேலிச் சந்தைக்கு மக்கள் நெருக்கடியை தவிர்க்கும் வகையில் நேற்று பிரதேசசபையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரம்பல் காரணமாக அரசு பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

யாழ்ப்பணத்தில் ஊரடங்கு சட்டம் தளர்த்தப்படும் போது, மக்கள் சந்தைகளில் மரக்கறிகளைக் கொள்வனவு செய்ய ஒன்றுகூடுகையில் அவர்களை சமூக இடைவெளியின் அடிப்படையில் கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

அதனடிப்படையில் திருநெல்வேலி பொதுச்சந்தையை இந்த இடர் காலங்களில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் போது இடமாற்றம் செய்ய முடிவெடுத்துள்ளோம். சந்தைக்கு வரும் வீதிகளில் பல இடங்களில் வியாபாரிகள் வியாபாரத்தை மேற்கொள்ள முடியும். மக்கள் சந்தைக்கு வரும் வீதிகளில் உள்ள வியாபாரிகளிடம் மரக்கறிகளை கொள்வனவு செய்ய முடியும்.

மேலும் விவசாயிகள் தங்களின் உற்பத்தி பொருள்களை தங்களின் இடங்களிலோ அல்லது கிராமங்களிலோ விற்பனை செய்ய முடியும். பொது மக்கள் திருநெல்வேலி சந்தைக்கு வரும் பாதைகளில் உள்ள வியாபாரிகளிடம் மரக்கறியைக் கொள்வனவு செய்து எமக்கு ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என்று நல்லூர் பிரதேசசபைத் தவிசாளர் கேட்டுக்கொண்டார். (ஐ-07)

## சுகமடையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நால்வர் முழுமையாகச் சுகமடைந்து வரும் நிலையில் அடுத்து வரும் நாள்களில் வீடு செல்வதற்கு அனுமதிக்கப்படுவர் என்று சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் இதுவரை 102 பேர் (ஜனவரியின் இனங்காணப்பட்ட சீனப் பெண் உட்பட) கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் மூவர் (சீனப் பெண் உள்பட) முழுமையாகச் சுகமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இந்த நிலையில் மேலும் நான்கு பேர் நோய்த் தாக்கத்திலிருந்து மீண்டுள்ள நிலையில் வரும் நாள்களில் வீடு திரும்புவர் என்று சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## போலிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) செய்திகள் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்தார்.

சமூக வலைத்தளங்களான முகநூல், இணையத்தளங்கள் மற்றும் உடனடித் தகவல் சேவைகளான வைபர், வட்ஸ் அப், மெசெஞ்ஜர் உள்ளிட்ட செயலிகளில் கோரானா வைரஸ் தொற்றுத் தொடர்பிலும் அவற்றோடு தொடர்புடைய விடயங்கள் சம்பந்தமாக, உண்மைக்கு மாறாகப் புனையப்பட்டு தொடர்ச்சியாக பல செய்திகள் வெளியிடப்படுகின்றன. அவை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன - என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்தார். (ஐ-07)

காலைக்கதிர்
Kalaikathir







# மன்னார் வீதிகளில் கிருமி நீக்கும் பணி

மன்னார், மார்ச் 26

மன்னார் வீதிகளில் கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

விசேட அதிரடிப்படையினர், வீதிகளில் கிருமி நீக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இந்தக் கிருமி நீக்கும் நடவடிக்கை நேற்றுக் காலை இடம்பெற்றது.

விசேட அதிரடிப்படையினருடன் மன்னார் பொலிஸார், மன்னார் நகர சபை, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்திருந்தனர்.

விசேட அதிரடிப்படையின் வடக்கு மாகாணப் பொறுப்பதிகாரி லயனல் குணதிலக்கவின் பணிப்புரைக்கு அமைவாக, கிருமி நீக்கும் நடவடிக்கை இடம்பெற்றது.

வவுனியா விசேட அதிரடிப்படை பொறுப்பதிகாரி டிப்தி கெட்டி ஆராய்ச்சி, மன்னார் விசேட அதிரடிப்படை பொறுப்பதிகாரி மலன் பிகிராடோ, மன்னார் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்க, மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கிஸாந்தன் ஆகியோரும் ஸ்தலத்தில் இருந்தனர். (ஐ)





# மட்டக்களப்பு மக்களை தனிமைப்படுத்துங்கள்!

## வைத்திய நிபுணர் அவசர கோரிக்கை



மட்டக்களப்பு, மார்ச் 26

மட்டக்களப்பு மக்கள் தனிமைப்படுத்தவேண்டும் எனவும் இல்லாவிட்டால் இரண்டு இலட்சம் பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்படலாம் என்றும் கொரோனா தடுப்புச் செயலணியிடம் வைத்திய நிபுணர் எஸ். மதனழகன் எச்சரிக்கையாகத் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று ஒரு சங்கிலித் தொடர் எனவும் மாவட்டத்தை மூடி தனிமைப்படுத்தாவிட்டால் இவ்வாறு பாரிய விளைவு ஏற்படுவதைத் தடுக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட கொரோனா தடுப்பு செயலணியின் விசேட கூட்டம் நேற்று மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அரச அதிபரும் செயலணியின் தலைவருமாகிய கலாமதி பத்மராஜா தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட மட்டு போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் எஸ்.மதனழகன் இந்த முன்னெச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொரோனா தொற்று ஒரு சங்கிலித் தொடர். ஏப்ரலில் காலநிலை மாறும்போது பிரச்சினை பெரிதாகத்தான் போகும். எனவே தனிமைப்படுத்தல் இல்லாமல் நெருக்கமாக இருந்தால் ஓட்டு மொத்தமாக ஒரு நாட்டை அழிக்கும்போது 45 தொடக்கம் 75 வீதம் அதன் பாதிப்பு இருக்கும்.

குறைந்தபட்சம் 40 வீதம் கொரோனா தொற்றுக்கு இந்த மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்றால் 5 இலட்சம் பொதுமக்கள் வாழுகின்ற இந்த மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 இலட்சம் பேர் கொரோனாவினால் பாதிக்கப்படுவார்கள்.

இதைத் தடுக்கமால் போனால் இந்த 2 இலட்சம் பேரில் 80 வீதமான 1 இலட்சத்து 60 ஆயிரம் பேர் பேசாமல் இருப்பார்கள். மிச்சம் 40 ஆயிரம் பேருக்கு வைத்தியசாலையிலை விடுதி வசதி வேண்டும். இப்போது இருக்கின்ற மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஆயிரம் கட்டில் அல்லது மிஞ்சிப் போனால் 2 ஆயிரம் கட்டில்களைத்தான் ஒழுங்கு செய்ய முடியும்.

இந்த 40 ஆயிரம் பேரில் 10 ஆயிரம் பேருக்கு நாங்கள் அவசர சிகிச்சை ஒட்சிசன் வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் வரும். ஆனால் இன்றைய நிலைவரத்தின்படி மட்டக்களப்பில் 55 பேருக்குத்தான் அவசர சிகிச்சை ஒட்சிசன் வழங்க முடியும்.

இதன் தீவிரம் எந்தளவுக்கு இருக்கப் போகின்றது என ஆராயாமல் கல்யாண வீடு, சாவு வீடு போன்ற மற்றைய விடயங்களைக் யோசித்துக்கொண்டு கதைத்துவிட்டு தனிமைப்படுத்தல் இல்லாமல் இருந்தால் இந்த தொடர் சங்கிலித் தொற்றுநோயை நிறுத்தமுடியாமல் போகும்.

இந்த 6 மணித்தியால ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்தி பொதுமக்களை பொருட்கள் வாங்க விடுவது கூட இந்தப் பாதிப்பைக் கொண்டுவரப் போகின்றது. அதேவேளை, நீங்கள் முகக் கவசம் அணிவதோ கையுறை போடுவதோ எதுவுமே 100 வீதம் இந்த தொற்றை கட்டுப்படுத்தப் போவதில்லை. இது பாதிப்பை கொண்டுவரப் போகின்றது.

எனவே முடியுமாயின் வீட்டுக்கு வீடு பொருட்களைக் கொண்டு சென்று வழங்கும் நடவடிக்கையை மேற்கொள்ளவும். அதற்கு ஒரு குழுவை நியமிக்கவும் இந்த மாவட்டத்தை ஒரு 14 நாட்கள் மூட முடியுமாக இருந்தால் அது இந்த வைரஸ் பரவலைத் தடுக்கும் ஒரு நல்ல செயலாக இருக்கும். ஆனால் இந்தத் தொற்று வந்தால் நிறுத்த முடியாமல் போகும்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் 100 எனக் காட்டப்படுவது 100 அல்ல. 20 ஆயிரம் பேருக்கு இந்தத் தொற்று இருக்கின்றது எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நிச்சயமாக அதைவிடக் கூடுதலாகத்தான் இருக்கும்.

கண்டபடி தைக்கின்ற எந்தவெரு முகக் கவசமும் வேலைக்காகாது. எந்த விதமான துணியைப் போட்டாலும் அதில் மூக்கில் வருகின்ற ஈரப்பதன் படிந்ததும் அதில் வைரஸ் படியும். எனவே வெளிப்பக்கம் தண்ணீரை உறுஞ்சாததும் உட்பக்கம் எமது ஈரத்தை உறுஞ்சுவதுமான பொருத்தமான தரமான முகக் கவசத்தை பாவிக்கவேண்டும். அது இல்லாது எதைக் கட்டினாலும் வைரஸ் அதனூடாக உட்செல்லத்தான் போகின்றது.

எனவே அறிவுறுத்தலாக முகக் கவசம், கையுறை போன்றவைகளை அணிந்துகொண்டு சென்றால் வைரஸ் தொற்றாது என்ற எண்ணத்தை விடுத்து தனிமைப்படுத்தலை முறையாக முன்னெடுத்தால் மட்டுமே இந்தத் தொற்றைத் தடுக்க முடியும் – என்றார்.

# இந்தியர்கள் கைது!

மன்னார், மார்ச் 26

மன்னார் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய மூன்று இந்தியப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் பகுதியில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகளின் போதே சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனக் கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்தது.

கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளின் மூலம் சந்தேக நபர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

கடந்த 13 ஆம் திகதி நாட்டுக்கு வந்துள்ள இவர்கள் 20 – 30 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர்.

சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# பொலிஸாரிடம் முறையிட 2 இலக்கங்கள்

கொழும்பு, மார்ச் 25

ஊரடங்கு உத்தரவின்போது மக்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக மூன்று தொலைபேசி எண்களை பொலிஸ் தலைமையகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி, ஊரடங்கு உத்தரவு காலத்தின்போது நோயாளர்கள், மின்சாரத் துண்டிப்பு, நீர் விநியோகத் தடை, மருந்துகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் உதவிகளுக்கு கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாகத் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

தொலைபேசி இலக்கங்கள் – 119, 0112 444 480 மற்றும் 0112 444 481 (ஐ)

காலைக்கதிர்
Kalaikathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## இழப்பிலும் இணைவு

கொரோனா என்ற பேரரக்கனை இரும்புக் கரம் கொண்டு அடக்குவதற்கான முழு ஆணையையும் இலங்கை மக்கள் கோட்டாபய அரசுக்கு முழு அளவில் வழங்கியிருக்கின்றனர் என்று கூறலாம்.

பொதுவாக இழப்பு நிகழ்வுகளில்தான் பிரிந்த உறவுகள் கூடுவர் என்பது நம்பிக்கை.

இப்போது இலங்கையை மனிதப் பேரிடர் என்ற அவலம் – ஆபத்து – சூழ்ந்து நிற்கின்றது.

இந்தச் சமயத்தில்தான் பிரிந்து நிற்கும் தரப்புகள் ஒன்று கூடிச் செயற்படும் வாய்ப்புக் கிட்டும்.

சுனாமிப் பேரிடர் மீட்பின் போது அதனைக் கண்டோம். எதிரிகளாகப் போரிட்ட இலங்கைப் படையினரும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒன்றுபட்டு நிவாரண மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டமையைப் பார்த்தோம். புலிகளின் நிவாரணப் பொருள்களுடன் அவர்களின் போராளிகள் லொறிகளில் தென்னிலங்கைக்கு சென்றமையைச் செய்திகளாகப் பிரசுரித்தோம்.

அத்தகைய ஒரு நெருக்கடி இப்போதும் இலங்கை நாட்டுக்குத் திரும்பவும் வந்திருக்கின்றது.

அரசியல் ரீதியாக முரண்பட்டு நின்ற – நிற்கின்ற – தரப்புகள் எல்லாம் கொரோனாக் கொடூரனை ஒழிப்பதில் அரசியல் முரண்பாடுகள், வேறுபாடுகளைத் துறந்து ஐக்கியப்பட்டு நிற்கின்றார்கள்.

அப்படி நிற்க வேண்டிய இக்கட்டான – தவிர்க்க இயலாத – சூழ்நிலையும் கூட.

அரசு பிரகடனப்படுத்திய ஊரடங்கைத் தளர்த்தவே கூடாது என நேற்று முன்தினம் அலரிமாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் போது பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே கூறிவிட்டார்.

மற்றொரு பிரதான கட்சியான ஜே.வி.பி., இப்போது அரசு பிரகடனப்படுத்தியுள்ள ஊரடங்கைத் தளர்த்தவே கூடாது, நீடிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

தமிழ், முஸ்லிம் கட்சிகளும் தரப்புகளும் கூட, அரசுத் தலைமை கொரோனா அரக்கனை அடக்குவதற்கு எடுக்கும் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்புத் தருகின்றன. இந்த விடயத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேசிய இணக்கம் ஒன்றைத் தமக்கு ஆதரவாகப் பெற்றுக் கொண்டிருக்கின்றார் – உருவாக்கிக் கொண்டிருக்கின்றார் – என்று கூறுவதில் தப்பில்லை.

அந்தத் தேசிய இணக்கம் எப்படி அவருக்குக் கிடைத்தது என்பதை ஆராயப் புறப்பட்டால் அது மனநிறைவைத் தருகின்ற பதிலைத் தராமல் போகலாம். சூழ்நிலை சந்தர்ப்பங்கள், கண்ணுக்குத் தெரியாத கொரோனா வைரஸ் என்ற எதிரியின் வலிமையும் செயற்போக்கும் என்று பல காரணங்கள் – கட்டாயங்கள் – இதற்குப் பின்னால் இருக்கலாம்.

ஆனால், ஒட்டு மொத்தத்தில் முழு நாட்டினதும் தேசிய நல்லிணக்க ஆதரவு ஒன்றை – பின்புல உத்வேக சக்தி ஒன்றை – அவர் ஈட்டியிருக்கின்றார் என்பது மறுக்க முடியாத உண்மை.

அதுவும் இராணுவ ரீதியான அணுகுமுறைப் போக்கை எல்லோருமே விரும்பியோ, விரும்பாமலோ வரவேற்க வேண்டிய கட்டாயத்தை கொரோனாக் கொடூரன் ஏற்படுத்தியிருக்கின்றான் என்பதே யதார்த்தம்.

தொட்டதற்கு எல்லாம் இராணுவ ஆக்கிரமிப்பு என்று (அது உண்மையும் கூட) துடிக்கும் தமிழ்த் தரப்புக் கூட, கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் முப்படைகளையும் பொலிஸரையும் நேரடியாகக் களத்தில் இறக்கி, விடயங்களை முன்னெடுக்கும் ஜனாதிபதி கோட்டாபயவின் அணுகுமுறையை எதிர்க்காமல் – ஆட்சேபிக்காமல் – பார்த்திருக்கின்றார்கள். ‘மௌனம் சம்மதத்துக்கான அறிகுறி’ என்பது போல.

இராணுவம் உட்பட முப்படையினருக்கும் கூட முள்ளிவாய்க்கால் வரைத் தமிழனத்துக்குத் தாம் இழைத்த மனிதப் பேரவலக் கொடூரங்களுக்குப் பிராயச்சித்தம் செய்து, சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்களின் மனதில் இடம்பிடித்துக் கொள்ளவும், மீள் நல்லிணக்கத்தை திரும்பக் கட்டியெழுப்பவும் இந்தக் கொரோனா எதிர்ப்புப் போர் நல்ல வாய்ப்பைத் தந்தே இருக்கின்றது.

கொரோனா சந்தேக நபர்களைக் கையாளும் விடயத்தில் – தனிமைப்படுத்தல் முகாம்களில் வைத்து அவர்களைப் பராமரிக்கும் பொறுப்பில் – வழமையாக ஆஸ்பத்திரிகளில் மருத்துவர்களும், தாதியர்களும், வைத்தியசாலை ஊழியர்களும் எடுக்கும் அதே ‘Risk’ஐ எடுத்தே படையினரும் பணியாற்றுகின்றனர் என்பதை நாம் மறக்கவோ, மறுக்கவோ முடியாது.

கொரோனா பேரரக்கனை எதிர்கொள்வதற்காக, தமிழர் தேசமும், சிங்களவர் தேசமும் குறைந்தபட்சம் எண்ணத்தினாலாவது இலங்கை நாடாக ஒருமித்து எழுச்சி கொண்டிருக்கின்றன என்பது உண்மை.

A blessing in disguise (துரதிஷ்டத்திலும் நன்மை) என்பது இதைத்தானோ...?

# அரசு வழங்கும் நிவாரணங்கள் குறித்து சமூக ஊடகங்களில் போலிப் பிரசாரம்

## சீறுகின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.



கொழும்பு,மார்ச் 26

அரசாங்கம் வழங்கும் நிவாரணங்கள் தொடர்பாகப் போலியான பிரச்சாரங்களை மேற்கொள்ள வேண்டாம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சமூக ஊடகங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஸ்ரீலங்காவில் ஏற்பட்டுள்ள வைரஸ் தொற்றுக் காரணமாக நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் மக்களுக்குத் தேவையான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அவ்வாறு முன்னெடுக்கப்பட்டுவரும் நிவாரணங்கள் தொடர்பாக போலியான பிரச்சாரங்களை மேற்கொள்ள வேண்டாம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சமூக ஊடகங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவதுடன் மக்களுக்கு அத்தியாவசியமான நுகர்வுப் பொருள்களை வழங்குவதற்கு அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டம் சம்பந்தமாக போலியான தகவல்களை சமூக மயப்படுத்துவோருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாகக் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

பொறுப்பான அரசாங்கம் என்ற வகையில் மக்களின் நலனுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள சில தீர்மானங்கள் தொடர்பாக போலியான தகவல்கள் சமூக ஊடகங்கள் மூலம் பிரச்சாரம் செய்யப்படுவதன் காரணமாக பிரதம அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார்.

அத்தியாவசிய நுகர்வுப் பொருள்கள் உள்ளடங்கிய நிவாரணங்களை மக்களுக்கு வழங்குவது உட்பட பிரதமர் மேற்கொண்டுள்ள தீர்மானங்களை வேண்டுமென்றே போலியான முறையில் சமூகமயப்படுத்தும் வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படுவதாகத் தெரிகிறது.

நிதியாற்றல் உள்ள இல்லாத அனைவரும் கொரோனா அனர்த்தம் காரணமாக உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ள இவ்வாறான சந்தர்ப்பத்தில், அரசியல் தேவைகளுக்காக கீழ்தரமான முறையில் இவ்வாறான போலியான தகவல்களை சமூகமயப்படுத்துவதனைக் கண்டிப்பதாகவும் பிரதம அமைச்சர் குறிப்பிட்டார்.

இவ்வாறு போலியான தகவல்களை சமூகமயப்படுத்துவது தொடர்பாக பிரதமரின் சட்டத்தரணிகள் கொழும்பு குற்றவியல் பிரிவுக்கு இன்று (நேற்று) முறைப்பாடொன்றைச் சமர்ப்பித்தனர்.

கட்சி, நிற பேதமின்றி நாட்டு மக்கள் அனைவரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் போலியான தகவல்களை சமூகமயப்படுத்தி அரசாங்கத்தின் முயற்சியை குறைகூறுவதற்குப் பதிலாக அரசாங்கத்தின் இந்த வேலைத்திட்டத்தை சிறப்பாக முன்னெடுக்க உதவி வழங்குமாறு அரசாங்கம் அனைத்து சமூக ஊடகங்களிடமும் வேண்டிக்கொள்கிறது. – என்றார்.

# கையுறைகள், சுத்திகரிப்புத் திரவம் நன்கொடையாக நேற்று கையளிப்பு



ஆசிய பசுபிக் பிராந்திய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழுவின்(APAD)ஒழுங்கமைப்பில்கொரோனா வைரஸ் தொற்றுக்களைத் தவிர்ப்பதற்கான தனியார் மற்றும் பொதுத் துறையினரை இணைத்து முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளின் வரிசையில் நேற்றையதினம் கிருபா லேணர்ஸ் தலைவர் அ.கிருபாகரனின் பங்களிப்பில் ஐம் பதாயிரம் ரூபா பெறுமதியான ஒரு தொகுதி கையுறைகள் (Gloves) மற்றும் போத்தல்களில் அடைக்கப்பட்ட – கை சுத்திகரிப்புத் திரவங்கள் ஆகியன யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கே.மகேசனிடம் கையளிக்கப்பட்டன.

இதில் அனர்த்த முகாமைத்துவ யாழ் மாவட்ட உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா, A PAD (ஏ – பாட்) மாவட்ட உத்தியோகத்தர் திரு.பி.எக்ஸ்.கலீஸ் மற்றும் கிருபா லேணர்ஸ் தலைவர் அ.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காலத்தின் தேவைகருதிய இச்செயற்பாட்டை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் வரவேற்றமையோடு பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் முன்னின்று பணிபுரியும் உத்தியோ கத்தர்களுக்கும், தேவைகருதிய மக்களுக்கும் இவை பகிர்ந்து வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டார்..

**நாளை 27.03.2020 வெள்ளிக்கிழமை**

நட்சத்திரம்: அச்சுவினி மு.ப 9.23
திதி : திருதியை மு.இ 9.05 வரை
இராகுகாலம் : 10.44 – 12.14
சுப நேரம் : 6.14 – 7.44

## சவூதியில் முதல் சாவு நேற்றுப் பதிவானது

உலகின் பல நாடுகளிலும் கொரோனா மரணங்கள் அடுத்தடுத்து நிகழ்ந்து வரும் நிலையில் சவூதி அரேபியாவும் தனது உயிரிழப்புக் கணக்கை நேற்றுத் தொடக்கியது.

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த 51 வயது ஆண் ஒருவர் சவூதியில் கொரோனா தொற்றுக் காரணமாக உயிரிழந்தார் என்று சவூதி சுகாதாரத்துறை தெரிவித்தது.

புனித நகராகக் கருதப்படும் மெக்காவில் உள்ள ஒரு மருத்துவமனையில் அந்த நபர் உயிரிழந்தார் என்று கூறப்பட்டுள்ளது.

வளைகுடா நாடுகளில் ஈரானுக்கு அடுத்தபடியாக கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடாக சவூதி உள்ளது. அந்த நாட்டில் நேற்று முன்தினம் மட்டும் 205 பேருக்குப் புதிதாக கொரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இப்போது 767 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று தீவிரமடைவதைத் தடுக்க சவூதி பல கட்டுப்பாடுகளை விதித்து வருகிறது. குறிப்பாக அடுத்த மூன்று வாரங்களுக்கு நாடு தழுவிய ஊரடங்கு உத்தரவையும் சவூதி அரசு பிறப்பித்துள்ளது.

மெக்கா மற்றும் மதீனாவைத் தவிர மற்ற அனைத்து மசூதிகளும் அங்கு மூடப்பட்டுள்ளன. அனைத்து போக்குவரத்து சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

## சீக்கிய மதத் தலம் மீது ஆப்கானில் தாக்குதல்


ஒருவர் மரணம்; பலர் காயம்

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள சீக்கியர்களின் கோயில் மீது நேற்று தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. கோயிலுக்குள் நுழைந்த ஆயுததாரிகளுக்கும் அரச படையினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டையும் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதலில் குறைந்தது ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்தனர்.

சோர்பசார் பகுதியில் இருக்கும் இந்தக் கோயிலில் தாக்குதல் நடந்த சமயத்தில் 150 பேர் வரையிலானோர் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

அவர்களில் பெரும்பாலானவர்களைத் தாம் பத்திரமாக மீட்டெடுத்துவிட்டதாக ஆப்கான் இராணுவத்தினர் தெரிவித்தனர். எனினும் சம்பவத்தில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கையை அவர்கள் தெளிவாகத் தெரிவிக்கவில்லை.

இஸ்லாமிய அரசு தீவிரவாத இயக்கம் இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றுள்ளது. இதற்கு முன்னரும் இந்த இயக்கம் ஆப்கானிஸ்தானில் சீக்கியர்கள் மீது தாக்குதல்களை நடத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானின் செல்வாக்குள்ள ஆயுதக்குழுவான தலிபான் தமக்கும் இந்தத் தாக்குதலுக்கும் தொடர்பு இல்லை என்று தெரிவித்துள்ளது.

தாக்குதலில் இரு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்றும் கோயிலில் இருந்த பக்தர்களில் பெரும்பாலானவர்கள் உயிருடன் மீட்கப்பட்டு விட்டனர் என்றும் உள்துறை அமைச்சுப் பேச்சாளர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

தாக்குதலில் 15 பேர் வரையிலானோர் காயமடைந்தார்கள் என்று உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்தன.

"தர்மசாலாவுக்குள் மூன்று தற்கொலைக் குண்டுதாரிகள் நுழைந்து குண்டை வெடிக்க வைத்தும் துப்பாக்கியால் சுட்டும் வெறியாட்டம் நிகழ்த்தினார்கள். வழிபாட்டுக்காக மக்கள் நிறைந்திருந்த நேரத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது" என்று ஆப்கானிஸ்தானின் ஒரே சீக்கிய நாடாளுமன்ற உறுப்பினரான நரேந்திர சிங் கல்சா தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலுக்குத் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்குத் தனது இரங்கலையும் தெரிவித்தார்.

## 4 ஆயிரம் சிறைக் கைதிகளை விடுவிக்கிறது எதியோப்பியா

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக எதியோப்பிய அரசு சிறைகளில் இருந்த 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகளை விடுதலை செய்யவுள்ளது.

சிறு குற்றங்களுக்காகத் தண்டனை அனுபவிப்பவர்கள் மற்றும் சிறைகளில் குழந்தைகளுடன் உள்ள பெண் குற்றவாளிகள் ஆகியோர் விடுவிக்கப்படவுள்ளவர்களில் அடக்கம் என்று சட்டமா அதிபர் புதன்கிழமை தெரிவித்தார். .

போதைப் பொருள் கடத்தல் மற்றும் ஆட்கடத்தலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக்களின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர்களும் விடுவிக்கப்பட்டு அவர்களது சொந்த நாடுகளுக்கே திருப்பி அனுப்பப்படவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

விடுவிக்கப்பட இருப்பவர்களில் பத்திரிகையாளர் பெகாடு மார்டெமிவோர்க்கும் ஒருவர். சஞ்சிகை ஒன்றின் ஆசிரியரான இவர், பிரதமர் அகமட் அபே 2018இல் ஆட்சியைத் திரும்பப் பிடித்த பின்னர் நாடு திரும்பினார். சிறைகளில் இருந்த அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டும் நாட்டின் அவசர கால நிலை நீக்கப்பட்டும் அரசியல் கட்சிகள் பலவற்றின் மீதிருந்த தடைகள் நீக்கப்பட்டும் நிலைமை சிறப்பானதாக இருந்தது.

எனினும் நாடு திரும்பிய பின்னர் வரி ஏய்ப்புச் செய்தார் என்கிற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட பெகாடுவுக்கு கடந்த ஒக்டோபர் மாதம் 7 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

## பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்சுக்கும் கொரோனா

பிரிட்டிஷ் முடிக்குரிய இளவரசர் சார்லசுக்குக் கொரோனா இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவருக்கு 71 வயது. ஆனால், அவர் ஆரோக்கியத்துடன் இருக்கிறார் என்று அரண்மனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இளவரசர் சார்லசுக்கு கொரோனாவின் லேசான அறிகுறிகள் இருப்பதாகவும் மற்றபடி அவர் ஆரோக்கியமாகவே இருப்பதாகவும், சார்லஸின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

இந்த அறிகுறிகளைத் தொடர்ந்து இளவரசர் சார்லஸ் மற்றும் சீமாட்டி கமிலா ஆகியோர் தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக்கொண்டனர் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக சார்லஸ் வீட்டில் இருந்தபடியே தனது அரச பணியை மேற்கொண்டு வந்திருந்தார்.

அரச மற்றும் மருத்துவ அறிவுறுத்தலின்படி, இளவரசரும் சீமாட்டியும் ஸ்காட்லாண்டில் உள்ள இல்லத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்கிறது அதிகாரப்பூர்வத் தகவல்கள். யாரிடமிருந்து இளவரசருக்கு கொரோனா தொற்று வந்திருக்கும் என்று கணிப்பது கடினம். கடந்த சில தினங்களில் அவர் பலரை சந்தித்துள்ளார் என்று தகவல்கள் கூறுகின்றன.

## செத்தவீட்டுக்கு 10 பேர்; திருமணத்துக்கு 5 பேர்

### ஆஸ்திரேலியாவில் புதிய கட்டுப்பாடுகள் அறிமுகம்

கொரோனா வைரஸ் பாதிப்பால் உலக நாடுகள் பலவும் செய்வதறியாது அனைத்தையும் முடக்கி வரும் நிலையில், ஆஸ்திரேலியாவில் மரணச் சடங்குகளில் ஆகக் கூடுதலாகப் 10 பேர் மட்டுமே கலந்துகொள்ள முடியும் என்றும் திருமண நிகழ்வுகளில் கலந்துகொள்வோரின் உச்சபட்ச எண்ணிக்கை 5 மட்டுமே என்றும் அரசு அறிவித்துள்ளது.

சமூகத் திரள்வை முடிந்தளவுக்குக் குறைக்கும் வகையிலான புதிய கட்டுப்பாடுகளைப் பிரதமர் ஸ்கொட் போரிசன் அமைச்சரவைக் கூட்டத்தில் அறிவித்தார்.

பொது மக்கள் அதிகளவில் புழங்கும் பொது இடங்கள் தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும், வெளிநாடுகளுக்குச் செல்வதற்குத் தடைவிதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இன்று புதன்கிழமை நள்ளிரவு 12 மணி முதல் இந்தப் புதிய விதிகள் நடைமுறைக்கு வருகின்றன.

ஆஸ்திரேலியாவில் இதுவரையில் 2 ஆயிரத்து 317 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 8 பேர் உயிரிழந்துள்ளனர். 24 மணி நேரத்தில் 427 பேருக்குப் புதிதாகத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

எனினும் இங்கு ஏனைய நாடுகளைப் போன்று பாடசாலைகள் மூடப்படவில்லை. அவை தொடர்ந்து நடந்து வருகின்றன. இருப்பினும் அவசிய தேவை தவிர்த்து மக்களை வீடுகளிலேயே இருக்கும்படி பிரதமர் கேட்டுள்ளார்.

## பொது நடமாட்டத் தடை மலேசியாவில் நீடிப்பு





கோலாலம்பூர், மார்ச் 26

கொரோனா வைரஸ் தொற்று மலேசியாவில் தீவிரமடைந்துவரும் நிலையில் அங்கு பொது நடமாட்டத்திற்கு விதிக்கப்பட்டிருந்த தடை ஏப்ரல் 14ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு மலேசியாவில் நேற்று ஒரே நாளில் நான்கு பேர் உயிரிழந்தனர். அங்கு இந்தத் தொற்றுக் காரணமாக இதுவரை 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 172 பேருக்கு வைரஸ் தொற்று நேற்று ஒரே நாளில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து வைரஸ் தொற்றியோர் எண்ணிக்கை 1,796 ஆக (மார்ச் 25 மதியம் வரையிலான நிலவரம்) அதிகரித்துள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நிலையில், மலேசியாவில் பொது நடமாட்டத்துக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடு ஏப்ரல் 14ஆம் திகதி வரை நீட்டிக்கப்படுவதாகப் பிரதமர் மொகிதின் யாசின் தெரிவித்தார். இதைத் தவிர, மக்களைக் காக்க தமக்கு வேறு வழி தெரியவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

இதையடுத்து நேற்று கோலாலம்பூரில் உள்ள முக்கிய பகுதிகள் ஆள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் காணப்பட்டன. மேலும் வாகனப் போக்குவரத்தும் மிகக் குறைவாகவே இருந்தது.

கோலாலம்பூரில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்களின் சந்திப்பின் போது மொத்த நோயாளிகளில் 45 பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர் எனவும், அவர்களில் 34 பேருக்கு செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு வருவதாகவும் சுகாதார அமைச்சின் பொது ஆணையர் மருத்துவர் நூர் ஹிசாம் தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களில் மூன்று பேர் வயதில் மூத்த ஆடவர்கள் என்றும், அவர்களுக்கு கொரோனா வைரஸ் பாதிப்புக்கு முன்பே உடல்நலக் குறைவு காரணமாக சிகிச்சை அளிக்கப்பட்டு வந்ததாகவும், நான்காவதாக உயிரிழந்த பெண்மணிக்கு 68 வயது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையே, பொது நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையை மீறுபவர்கள் கைதாவதைத் தவிர்க்க இயலாது என மலேசியக் காவல்படைத் தலைவர் அப்துல் ஹமீத் படோர் தெரிவித்துள்ளார். இந்த காரணத்துக்காக இதுவரை 110 பேர் கைதாகி உள்ளனர் எனவும் அவர் கூறினார்.

# தமிழ்நாட்டில் மேலும் 5 பேருக்குத் தொற்று

சென்னை, மார்ச் 26

தமிழ்நாட்டில்மேலும்ஐந்துபேருக்குகொரோனா தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவர்களில் 4 பேர் இந்தோனேசியர்கள். ஒருவர் சென்னையைச் சேர்ந்த பயண வழிகாட்டி.

ஐந்து பேரும் சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மார்ச் 22ஆம் தேதி முதல் சிகிச்சைபெற்றுவரும் நிலையில் அவர்களுக்கு கொரோனா வைரஸ் தாக்கம் இருப்பது உறுதி யாகியிருக்கிறது.

இந்த ஐந்து பேரையும் சேர்த்து, தமிழ்நாட்டில் கொரோனாவால்பாதிக்கப்பட்டவர்கள்எண்ணிக்கை 23ஆக உயர்ந்துள்ளது. ஒருவர் உயிரிழந்துள் ளார். தமிழ்நாட்டில் மார்ச் 25ஆம் திகதி வரை 20 லட்சத்து 9 ஆயிரத்து 276 பேர் காய்ச்சலுக் காகப் பரிசோதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 15 ஆயிரத்து 492 பேர் கண்காணிக்கப்படுகின்றனர். 211 பேர் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

மொத்தம் 890 பேருக்கு கொரோனா சோதனை செய்யப்பட்டுள்ளது. இதில் 757 பேருக்கு அந்த நோய் இல்லையென்பது தெரியவந்துள்ளது. 23 பேருக்கு நோய் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவர் களில் ஒருவர் குணமடைந்து வீடுதிரும்பிவிட்டார். ஒருவர் மரணமடைந்துவிட்டார். 110 பேருக்கான முடிவுகள் இன்னும் வெளியாகவில்லை.

# விழித்திரு.... விலகியிரு.... வீட்டிலிரு... தமிழ்நாடு மக்களுக்கு முதல்வர் உரை



கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கையின் ஓர் அங்கமாக இந்தியாவில் 21 நாள்கள் ஊரடங்கு நடைமுறைக்கு வந்துள்ள நிலையில் தமிழக மக்க ளுக்கு உரையாற்றிய முதலமைச்சர் ஈ.பழனிச்சாமி, விழித்திரு, விலகியிரு, வீட்டில் இரு என்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

தமிழக முதலமைச்சராக இல்லாமல் உங்கள் குடும்பத்தில் ஒருவனாகப் பேசுகிறேன். 21நாள் ஊரடங்கு என்பது விடுமுறை அல்ல. உங்கள் குடும்பத்தை பாது காக்கும் அரசின் உத்தரவு.

சாதி, மதம், இனம் வேறுபாடு இன்றி கொரோனாவை விரட்டியடிக்க உறுதி ஏற்போம்.

கொரோனாவை ஒழிக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழக அரசு சார்பில் ரூ. 3 ஆயிரத்து 850 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் 10 ஆயிரம் 518 படுக்கைகள் தயாராக உள்ளன.

மக்களின் ஒவ்வொருவடைய ஒத்துழைப்பும் அவசியம். அத்தியாவசிய பொருட்கள் தங்கு தடை யின்றி கிடைக்கும். பங்கீட்டுக் கடைகளில் ஏப்ரல் மாத பொருள்கள் விலையின்றி வழங்க ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

சமூக விலகல் என்பது முக்கியமானது. வெளியில் பொருட்கள் வாங்க செல்லும்போது 3 அடி தூர இடைவெளியை கடைபிடிப்போம். நமது பாரம்பரிய முறைப்படி வெளியில் சென்று வீட்டிற்கு வரும்போது கால், கைகளை நன்றாக கழுவ வேண்டும்.

கொரோனாவுக்கு எதிராக போராட விழித்திரு... விலகி இரு... வீட்டில் இரு....

இவ்வாறு முதலமைச்சர் பேசினார்.

# சுயமாக தனிமையில் கமல் குடும்பத்தினர்

தமிழ்த் திரைப்பட நடிகர் கமல்ஹாசன் மற்றும் அவரது ஒட்டுமொத்தக் குடும்பமும் வெவ்வேறு இடங் களில், தனித் தனி வீடுகளில் சுயமாகத் தனிமைக் குள்ளாகியுள்ளனர்.

கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கையின் ஓர் அங்கமாக அவர்கள் தம்மைத் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளனர்.

கமல்ஹாசனின் முன்னாள் மனைவி சாரிகாவும், மூத்த மகள் ஸ்ருதியும் மும்பையில் தனித்தனி மாடிக் குடியிருப்பில் வசித்து வருகின்றனர். கமலும், இளைய மகள் அக்ஷராவும், சென்னையில் வெவ் வேறு வீடுகளில் வசித்து வருகின்றனர்.

ஸ்ருதி ஹாசன் பத்து நாட்களுக்கு முன்னர்தான் லண்டனிலிருந்து திரும்பினார். வந்த நாளிலிருந்து வீட்டிலேயே தனிமையில் இருக்கிறார்.

இதுகுறித்து பத்திரிகை ஒன்றுக்கு ஸ்ருதிஹாசன் அளித்துள்ள பேட்டியில், எனக்குத் தனிமையில் இருப்பது வழக்கம். வெளியே போக வாய்ப்பில்லாமல் இருப்பதும், இனி என்ன ஆகும் என்ற அச்சமும்தான் கடினமாக இருக்கிறது" என்று தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக மக்கள் பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்துவிட்டனர் என்றும் அவர் தெரிவித்தார்.



"எனது மொத்தக் குடும்பமுமே சுயமாகத் தனி மையில் இருக்கிறது. அம்மா மும்பையில், அப்பா வும் அக்ஷராவும் சென்னையில் வெவ்வேறு வீடு களில் தனியாக இருக்கின்றனர். எங்கள் ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு பயணத்திட்டம் இருந்ததால் ஒரே இடத்தில் தனிமைக்குள்ளாகி வசிப்பதில் அர்த்த மில்லை என நினைத்தோம். இதுபோல ஒவ்வொரு வரும் முடிவெடுக்க வேண்டும் என்று நினைக்கி றேன்" என்று ஸ்ருதி ஹாசன் கூறியுள்ளார்.

# பாதிப்பு எண்ணிக்கை 606 ஆக உயர்வு

*இந்தியாவில் வைரஸ் பாதிப்பு ஏற்பட்டவர் களின் எண்ணிக்கை 606 ஆக அதிகரித்துள்ளது.*

*இதுதொடர்பாக, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கொரோனா வைரஸ் தொற்று எண்ணிக்கைமேலும் அதிகரித்துள்ளது. தற் போதுள்ள நிலவரப்படி நாடு முழுவதும் 606 பேர் வைரஸ் தொற்றுக்கு ஆளாகி உள்ளனர். கொரோனா பாதிப்பு ஏற்பட்டோர் தனிமைப் படுத்தப்பட்டு மருத்துவர்கள் கண்காணிப்பில் இருந்து வருகின்றனர். இவர்களில் 42 பேர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ளனர் என தெரிவித்துள்ளது.*

*மேலும், கொரோனா வைரஸ் தாக்கி இந்தி யாவில் பலியானோர் எண்ணிக்கை 10 ஆக அதி கரித்துள்ளது.*




# சுகாதாரத்துறை பணியாளர்களுக்கு ஒடிசாவில் 4 மாத சம்பள முற்பணம்

சுகாதாரத்துறை பணியாளர்களுக்கு 4 மாத சம்பளம் முன்பணமாக வழங்கப்படும் என்று இந்தியாவின் ஒடிசா மாநில அரசு அறிவித்துள்ளது.

கொரோனா வைரசை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள சுகாதாரத் துறை பணியாளர்களுக்கு இந்த வசதிவழங்கப் பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவாமல் கட்டுப் படுத்தும் நடவடிக்கையாக நாடு முழுவதும் 21நாட்கள் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இந்தக் காலகட்டத் திற்குப் பின்னரும் நிலைமை எப்படி இருக் கும் என்று கணிக்க முடியாத சூழல் உள்ளது.

இதையடுத்து, அனைத்து மாநில அரசு களும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

இந்த நிலையில், கொரோனா வைரசை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள சுகா தாரத் துறை பணியாளர்களுக்கு 4 மாத சம்பளம் முன்பணமாக வழங்கப்படும் என ஒடிசா அரசு அறிவித்துள்ளது. இதற்கான உத்தரவுக்கு முதல் மந்திரி நவீன் பட்நாயக் ஒப்புதல் அளித்தார்.

# கொரோனாவின் புண்ணியத்தில் அனைத்து மாணவருக்கும் பாஸ்

**ஒன்று முதல் ஒன்பதாம் வகுப்புகளுக்கு தமிழகத்தில் அறிவிப்பு**

தமிழ்நாட்டில் ஒன்று முதல் ஒன்பதாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் அனை வரும் தேர்வுகள் இன்றி தேர்ச்சிபெற்றதாக அறிவிக்கப்படுவார்கள் என முதலமைச்சர் எடப்பாடிகே. பழனிச்சாமி அறிவித்துள்ளார்.

கொரோனா நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கையின் ஒருபகுதியாக பாடசாலை கள் மூடப்பட்டிருக்கும் நிலையில் மாணவர் கள் அனைவரும் தன்னிச்சையான தேர்ச்சி யைப் பெற்றவர்களாகியுள்ளனர்.

மேலும், மார்ச் 24ஆம் திகதியன்று 12ஆம் வகுப்புக்கான தேர்வுகள் நடைபெற்ற போது, பலர் தேர்வுகளை எழுத வரவில்லை என்பதால்வேறு ஒரு நாளில் இந்தத் தேர்வு நடைபெறும் என்றும் திகதி பின்னர் அறி விக்கப்படுமென்றும் முதலமைச்சர் அறி வித்திருக்கிறார்.

தமிழ்நாட்டில் செவ்வாய்க்கிழமை மாலை முதல் ஊரடங்கு உத்தரவு பிறப் பிக்கப்பட்ட நிலையில், தேநீர் கடைகள் திறந்திருக்க அனுமதிக்கப்பட்டது. ஆனால், அங்கு கூட்டம் கூடுவதால் மாலை 6 மணி முதல் தேநீர்க் கடைகளை மூடுவதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# உலகளாவிய நோயாக கொரோனா உருவெடுத்துள்ள நிலையில்

# உளநலனைப் பாதுகாப்பது எப்படி ?

**உலகளாவிய நோயாக கொரோனா உருவெடுத்துள்ள நிலையில் உள நலனைப் பாதுகாப்பது எப்படி ? இது தொடர்பாக உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் நோய் கட்டுப்பாடு மத்திய நிலையத்தின் பரிந்துரைகளுக்கு அமைய தமிழ் பேசும் மக்களின் நலன் கருதி ஆவணம் ஒன்று தயார் செய்யப் பட்டுள்ளது. அது இங்கு பிரசுரமாகின்றது.**

கொரோனா தொற்று நோய் உலகெங்கும் பரவி வரும் நிலையில் எதிர்காலம் பற்றிய கவலைகளும் தொடர்ச்சியான கொரோனா செய்திகளும் உங்களுடைய மனஉளைச்சல் மற்றும் உளச்சோர்வை அதிகரிப்பதுடன் உங்களுடைய உளநல ஆரோக்கியத்தையும் பாதிக்கலாம். எனவே இத்தகைய பாதிப்புகளில் இருந்து எம்மை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்போம்.

1. தொடர்ச்சியாக மனஅமைதியை குலைக்கும் ஊடகங்களை (தொலைக்காட்சி அலைவரிசை, வானொலி அலைவரிசை, இணைய தளங்கள் ) பார்ப்பதையும் கேட்பதையும் வாசிப்பதையும் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

2. சமூக ஊடகங்களில் தொடர்ச்சியாக கொரோனா தொடர்பான பய முறுத்தும் செய்திகளை வெளியிடுபவர்களையும் குழுக்களையும் உங்களுடைய தொடர்பில் இருந்து நீக்கி விடுங்கள்.

3. ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் செய்திகளில் பெரும்பகுதி மிகைப் படுத்தப்பட்ட அல்லது பொய்யான தகவல்கள் என்பதை உணர்ந்து கொள்வதுடன் அவ்வாறான செய்திகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதை தவிர்ப்பதனால் உங்களின் அன்புக்கு உரியவர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாவதற்கு நீங்கள் காரணமாவதை நிறுத்துங்கள்.

3.ஊரடங்கு சட்ட நேரத்தில் குடும்ப உறுப்பினர்களுடன் அதிக நேரத்தை செலவிடுவதுடன் அவர்களுடன் இனிமையாக நேரத்தை வீட்டில் கழிப்பதற்கு உரிய விளையாட்டுகள் பாடல்கள் பாடுவது, கீதங்களை இசைப்பது, நூல்களை வாசிப்பது போன்ற ஆரோக்கியமான பொழுதுபோக்கு முறைகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

4. உளநல ஆரோக்கியத்தை பேணுவதற்கும் நோய்எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கும் சத்தான உணவுகள், ஒழுங்கான உடற் பயிற்சிகள் (வளர்ந்தவர்களுக்கு தினம் தோறும் 30 நிமிடங்களுக்கு குறையாமலும் சிறுவர்களுக்கு தினமும் 1 மணி நேரத்துக்கு குறையாமலும்) மற்றும் போதியளவு நித்திரை (தினம் தோறும் 8 மணி நேரம்) அவசியம்.

5.மார்கழிமாதமளவில்கொரோனா தடுப்பூசி பாவனைக்கு வரும் என்ற எதிர்கால நம்பிக்கையுடன் தேவையற்ற மனப்பாரங்களையும் கவலைகளையும் இறைவனின் பொறுப்பில் விட்டுவிடுவதுடன் மனதை அமைதியாக்க தியானத்திலும் பிரார்த்தனையிலும் ஈடுபடுங்கள்.


6. அரசாங்கத்தினாலும் சுகாதார துறையினராலும் வெளியிடப்படும் முக்கிய அறிவித்தல்கள் தொடர்பாக அவதானமாக இருப்பதுடன் அவற்றை உங்களுக்கு தெரிவிக்கக் கூடிய நம்பிக்கையான நண்பர்களையும் உறவினர்களையும் தொடர்பில் வைத்து இருங்கள்.

7. அதிகரித்த மனப்பதற்றம், பயம், நித்திரை கொள்ள முடியாத நிலை ஏற்பட்டால் உங்களுடைய பிரதேசத்துக்குரிய உளநல ஆலோசனை வழங்கும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உளவள ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுங்கள்.

8. மதுபானம், புகைபிடித்தல் மற்றும் ஏனைய போதை பொருள்கள் மனப் பதற்றத்துக்கும் கவலைகளுக்கும் தீர்வாகா என்பதுடன் உங்களுடைய உளநலம் மற்றும் உடல் நலத்துக்கு மேலும் ஊறுவிளைவிக்கும் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

9. உங்களுடைய குடும்ப உறுப்பினர், உறவினர் மற்றும் நண்பர்கள் உளவியல் பாதிப்புகளுக்கு உள்ளாகி இருந்தால் அவர்களுக்கு ஆறுதல் கூறி உரிய உளநல ஆலோசனை கிடைக்க உதவி செய்யுங்கள்.

10. சிறு பிள்ளைகளும் உளவியல் பாதிப்புக்கு உள்ளாகலாம் என்ற உண்மையை அறிந்துகொள்வதோடு பெற்றோர்கள் பிள்ளைகளோடு அதிகரித்த நேரத்தை செலவழிக்கவேண்டும். அதிகரித்த அழுகை, நித்திரை கொள்வது மற்றும் உணவுப் பழக்கங்களில் ஒழுங்கற்ற தன்மை மனத்தை ஒருநிலைப்படுத்த முடியாமை போன்றவை சிறுவர்கள் உளவியல் பாதிப்புகளுக்கு உள்ளாகி இருப்பதன் அறிகுறியாக இருக்கலாம்.



**வைத்தியர் முரளி வல்லிபுரநாதன் சமுதாய மருத்துவ நிபுணர்**

# சீனாவில் மற்றொரு வைரசும் பரவுகிறதா?

உலகம் முழுக்க கொரோனா வைரஸ் குறித்த அச்சம் ஆட்டிப்படைத்து வரும் நிலையில், சீனாவில் ஹண்டா வைரஸ் என்ற ஒரு வகை தொற்று நோயால் ஒருவர் உயிரிழந்திருப்பது அதிர்ச்சி அலையைக் கிளப்பியுள்ளது.

கடந்த திங்கட்கிழமையன்று சீனாவின் ஷாங்ஷி பிராந்தியத்தில், சக தொழிலாளர்கள் 32 பேருடன் பேருந்தில் பணிக்கு சென்று கொண்டிருந்த நபர் ஒருவருக்கு வழியிலேயே உடல் நலக்குறைவு ஏற்பட்டது. உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், சிறிது நேரத்தில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அவரின் குருதி மாதிரிகளைப் பரிசோதித்து பார்த்ததில் அவருக்கு ஹண்டா வைரஸ் என்ற தொற்று நோய் இருப்பது தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து அவருடன் பேருந்தில் பயணம் செய்த 32 பேருக்கும் பரிசோதனை நடத்தப்பட்டத்தில், அவர்கள் யாருக்கும் இந்த வைரஸ் தொற்று ஏற்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது.

தற்போது உலகமே கொரோனா அச்சத்தில் மூழ்கியிருக்கும் நேரத் தில் மற்றொரு புதிய வைரசினால் ஒருவர் உயிரிழந்திருப்பதால் இந்த செய்தி உலகம் முழுக்க வேகமாகப் பரவியது.



பலரும் சமூக வலைத் தளங்களில் இது குறித்த கவலையை வெளிப்படுத்தியிருந்தனர். ஆனால் ஹண்டா வைரஸ் என்றால் என்ன? அது எப்படி பரவுகிறது? கொரோனாவைப் போல அதன் தாக்கம் இருக்குமா? என்ற கேள்விகளுக்குப் பலருக்கும் தெளிவான பதில் கிடைக்கவில்லை.

அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்தின் அறிக்கையின் படி, இந்த வைரஸ் எலிகள் மூலம் பரவுகிறது. ஹண்டா வைரஸால் பாதிக்கப்பட்ட எலியின் எச்சில் அல்லது கழிவுகளைத் தொடும் ஒருவர், தனது கைகளை கழுவாமல், நேரடியாக தனது முகத்தைத் தொட்டால் அவருக்கு இந்த வைரஸ் பரவும் வாய்ப்புகள் அதிகம். ஆனால் மனிதர்களில் இந்த வைரஸ் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு எளிதாகப் பரவாது. இந்த வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதைக் கண்டறிய ஒரு வாரம் முதல் எட்டு வாரங்கள் வரை ஆகும்.

> **உலகம் முழுக்க கொரோனா வைரஸ் குறித்த அச்சம் ஆட்டிப் படைத்து வரும் நிலையில், சீனாவில் ஹண்டா வைரஸ் என்ற ஒரு வகை தொற்று நோயால் ஒருவர் உயிரிழந்திருப்பது அதிர்ச்சி அலையைக் கிளப்பியுள்ளது.**

இந்த வைரஸால் பாதிக்கப்பட்ட நபருக்குக் காய்ச்சல், சளி, உடல் வலி, வாந்தி ஆகியவை ஏற்படும். சரியான சிகிச்சை அளிக்கப்படா விட்டால், பாதிக்கப்பட்ட நபரின் நுரையீரலில் நீர் கோர்த்து சுவாசப் பிரச்சினைகள் ஏற்படும். பின்னர் பாதிக்கப்பட்ட நபரின் நுரையீரல், சிறுநீரகம் ஆகியவை செயலிழந்து மரணம் கூட நிகழலாம்.

ஹண்ட வைரஸ் புதிதாக உருவான வைரஸ் கிடையாது. உலகின் பல்வேறு பகுதிகளில் இதன் தொற்று ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

கடந்தாண்டு ஜனவரி மாதம், தென் அமெரிக்காவில் உள்ள பட்டகோனியா என்ற பகுதிக்கு சென்ற சுற்றுலா பயணிகளில் ஒன்பது பேர் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டனர். அதன் பிறகு அங்கு நடத்தப்பட்ட பரிசோதனைகளில் 60 பேருக்கு ஹண்டா வைரஸ் தொற்றாளர்கள் இருந்தது கண்டறியப்பட்டது. அவர்களில் 50 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

ஹண்டா வைரஸின் இறப்பு விகிதம் 38 சதவிகிதம் எனவும் அதற்கு தற்போது வரை தடுப்பு மருந்து ஏதும் கண்டறியப்படவில்லை எனவும் அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹண்டா வைரஸ் ஒரு தொற்று நோயாக இருந்தாலும், அது அவ்வளவு எளிதாக ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவாது எனவும் உயிரியல் அறிஞர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து குளோபல் டைம்ஸ் இணையதளத்திடம் பேசிய வுஹான் பல்கலைக்கழக உயிரியல் நிபுணர் யாங் ஷங்யு ,"ஹண்டா வைரஸ் உள்ள ஒருவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தாலே மற்றொருவருக்கு இந்த வைரஸ் பரவாது. மேலும் ஒரே நேரத்தில் கொரோனா வைரஸும், ஹண்டா வைரஸும் ஒருவரை தாக்க வாய்ப்பில்லை. கொரோனா வைரஸை போல, ஒருவரின் சுவாச மண்டலம் மூலமாக ஹண்டா வைரஸ் பரவாது. ஆனால் ஹண்டா வைரஸ் தொற்று ஏற்பட்ட மனிதரின் கழிவுகள் அல்லது குருதி மூலமாக இது மற்றொருவருக்கு பரவும்." என விளக்கமளித்துள்ளார்.

பொதுவாக இந்த வைரஸ் கிராமப்புறங்களில் மே மற்றும் ஜூன் மாத இடைவெளியிலும், ஒக்டோபர் மற்றும் டிசெம்பர் மாத இடைவெளியிலும் அதிகம் காணப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கொரோனா தனிமைப்படுத்தலுக்காக தன் வீட்டைக் கையளித்த புஞ்சிநிலமே



கொழும்பு, மார்ச் 26

கொரோனா நோய் சந்தேகநபர்களைத் தனிமைப்படுத்தி சிகிச்சை அளிப்பதற்காக திருகோணமலை மாவட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே தமது வீட்டை வழங்கியுள்ளார்.

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் வீ. பிரேமானந்திடம் நேற்றையதினம் இந்த வீடு கையளிக்கப்பட்டது.

இதேவேளை பொது இடங்களில் தொற்று நீக்கும் செயற்பாட்டை மேற்கொள்ளும் நோக்கில் தனது சொந்த நிதியுதவியில் கிருமி நாசினி தெளிகருவிகளையும் அவர் வழங்கி வைத்தார்.

திருகோணமலையின் அனைத்துப் பிரதேச சபைகளுக்கும் இக்கருவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் திருகோணமலை, கந்தளாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கும் கிருமி நாசினி தெளி கருவி வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச சபைகளின் தலைவர்கள் மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் உயரதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கடந்த அமைச்சரவையில், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக சுசந்த புஞ்சிநிலமே செயற்பட்டார்.

## மஸ்கெலியாவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 6 பேருக்கு கொரோனா இல்லை என உறுதி!

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஸ்கெலியா பகுதியில் கொரோனாத் தொற்று பரவியிருக்கலாம் என சந்தேகத்தின் பேரில் தனிமைப்படுத்தப்பட்ட ஆறு பேருக்கு 14 நாள்களின் பின் கொரோனா தொற்று ஏற்பட்டதற்கான எவ்வித அறிகுறியும் காணப்படாமையினால் நேற்று அவர்களுக்கு கொரோனா ஏற்படவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டு அவர்களுக்கு சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டது.

இவர்கள் கடந்த 09 திகதி இந்தியாவுக்கு சென்று வந்ததன் காரணமாகவே வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்தத் தனிமைப் படுத்தலின் போது மஸ்கெலியா பொது சுகாதார பரிசோதகர்கள் இவர்களின் நிலைமை குறித்து தொடர்ந்தும் கண்காணித்து வந்தனர்.

அதனை தொடர்ந்து இவர்களுக்கு கொவிட் 19 என்ற வைரஸ் பரவவில்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொண்டதனை தொடர்ந்து அவர்களை சமூகமயமாக்கும் நடவடிக்கை நேற்று மஸ்கெலியா பொது சுகாதார வைத்திய அதிகாரி டி.சந்திரராஜன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மஸ்கெலியா பிரதேச சபை தலைவி திருமதி செம்பகவள்ளி, பொது சுகாதார பரிசோதகர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பாணந்துறையில் கர்ப்பிணிக்கு கொரோனா வைரஸ் தொற்று!




பாணந்துறை,மார்ச்26

கர்ப்பிணிப் பெண்ணுக்கு கோவிட் –19 (கொரோனா வைரஸ்) இருப்பது கண்டறியப்பட்டதை அடுத்து பாணந்துறையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

சில நாள்களுக்கு முன்பு, வெளிநாட்டைச் சேர்ந்த உறவினர்களைக் கொண்ட குழு ஒன்று பாணந்துறையில் வசித்து வந்த இந்தப் பெண்ணின் வீட்டிலிருந்து வெளியேறியது.

இது குறித்த தகவல்களுக்குப் பிறகு, அப்பகுதியில் உள்ள சுகாதார அதிகாரிகள் அந்தப் பெண்ணின் வீட்டிற்குச் சென்று, அவரை 14 நாள்கள் தனிமைப்படுத்த உத்தரவிட்டனர்.

அந்த பெண் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையை மீறி அப்பகுதியில் பல இடங்களுக்குச் சென்றுள்ளார். சில நாள்களுக்கு முன்பு பாணந்துறையில் உள்ள மகப்பேறு மருத்துவமனைக்கும் அவர் சென்றிருந்தார். அந்தக் கர்ப்பிணிப் பெண் தனது உண்மையான நிலையை மறைத்து கிளினிக்கில் கலந்து கொண்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் கர்ப்பிணிப் பெண்ணுக்கு கொரோனா வைரஸ் இருப்பது கண்டறியப்பட்டு ஐ.டி.எச். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது தெரியவந்தது. அதன் பின்னர் விசாரணை நடத்திய அதிகாரிகள் அவர் சென்று வந்த இடங்கள் அறிந்து கொண்டனர்.

அதன்படி, பெண் சென்ற – பாணந்துறையில் உள்ள – தனியார் மருத்துவமனைக்கு சீல் வைக்கக் காவல்துறை மற்றும் சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## கொரோனா அபாயம் அதிகமுள்ள 'சிவப்புப் பிரதேசமாக' பேருவளை

இலங்கையில் கொரோனா அபாயம் மிக்க சிவப்புப் பிரதேசமாக பேருவளைப் பகுதி அடையாளமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பேருவளை சுகாதார வைத்திய அதிகாரி வருன செனவிரத்ன தெரிவிக்கையில் –

பேருவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 135 பேர் தனிமைப்படுத்தலுக்கு உற்படுத்தப்பட்டமை, அந்த பிரிவில் 206 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை மற்றும் பேருவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 7 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளமை என்பவற்றை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. – என்றார்.

களுத்துறை மாவட்டத்தில் 13 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ள நிலையில் அவர்களில் 7 பேர் பேருவளை சுகாதார வைத்திய பிரிவினை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## தீங்கிழைக்கும் செய்திகளை பேஸ்புக்கில் பதிவிட்டவர் கைது

### எப்ரல் 1 வரை விளக்கமறியலில்

தனது முகப்புத்தகக் கணக்கு மூலம் போலிச் செய்திகளை பரப்பிய குற்றச்சாட்டில் அரசு பல்கலைக்கழக நிர்வாகி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தார்.

குற்றவியல் விசாரணைப் பிரிவினரால் (சிஐடி) இவர் கைது செய்யப்பட்டார் எனப் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

தனது முகப்புத்தகக் கணக்கில் தீங்கிழைக்கும் செய்திகளைப் பரப்பிய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கோட்டை நீதிவான் ரங்கா திஸநாயக்க முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார் அவரை எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.






## தினம் ஒரு தலைப்பு சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்


நேற்றைய போட்டி 'ஊரடங்கும் ஊர் மக்களும்' என்ற தலைப்பில் இடம் பெற்றது.

படம் 1
**காசினி கஜேந்திரன், தரம் 1,**
வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி.

படம் 2
**மதிவதனன் சுடரகன், தரம் 10,**
யா/ அருணோதயாக் கல்லூரி.

இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு – வீட்டுக்குள் வாழ்வு


படம் 1


படம் 2

# வைரஸுடன் நடக்கும் யுத்தத்தை வெற்றி கொள்ள ஒத்துழையுங்கள்

## மக்களிடம் கிளிநொச்சி அரச அதிபர் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 26

ஊரடங்கு சட்டம் தளர்த்தப்படுகின்ற நேரங்களில் பொது மக்கள் அத்தியாவசியப்பொருட்களைக்கொள்வனவு செய்வதற்காக சந்தைகள் மற்றும் வியாபார நிலையங்களுக்கு முன் அதிகளவில் ஒன்று கூடுவதனை தவிர்ப்பதற்காக விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகதெரிவித்துள்ள கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கண்ணுக்குத் தெரியாத வைரசுடன் நடக்கும் யுத்தத்தை வெற்றிக்கொள்ள பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

நேற்றுக் காலை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் முற்பகல் 11 மணிக்கு அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின் பின் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுகின்ற நேரங்களில் பொது மக்கள் அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவுசெய்வதற்காக அதிகளவில் ஒன்று கூடுகின்றனர். இதுகொரோனாவைரஸ் தொற்றை தடுப்பதற்கு அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் அனைத்தையும் சில மணி நேரங்களுக்குள் கேள்விக்குள்ளாக்கி விடுகின்றது. எனவேதான் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுகின்ற போது பொது மக்கள் அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குரிய விசேட ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

துதாவது ஒவ்வொரு கிராமங்களிலும் கிராம அலுவலர் மூலம் தெரிவு செய்யப்படுகின்ற வியாபார நிலையங்களைக் குறிப்பிட்ட நேரங்களில் திறந்து பொது மக்களுக்கான பொருட்களை வழங்கவும், தொலைபேசி அழைப்பின் ஊடாக வீடுகளுக்கான பொருட்களை அந்த வியாபார நிலையங்கள் மூலம் விநியோகிப்பதற்கும், இந்த வியாபார நிலையங்களுக்கான பொருட்களை மாவட்டத்தில் உள்ள மொத்த வியாபாரிகள் மூலம் கிராமங்களுக்குச் சென்று வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்தோடு, கூட்டுறவுச் சங்ககங்களின் கிளைகள் மூலமும் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்படும். மேலும் விவசாயிகளிடம் இருந்து மரக்கறிகள் அந்தந்தக் கிராமங்களில் தெரிவு செய்யப்படுகின்ற இடங்களில் விற்பனை செய்வதோடு கூட்டுறவு அமைப்புகளின் ஊடாக விற்பனை செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருட்கள் தட்டுபாடின்றி காணப்படுவதோடு, தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்களை மாவட்டத்துக்குள் கொண்டு வருவதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன – என்றார்.

எனவே பொது மக்கள் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுகின்ற நேரங்களில் நகரில் ஒன்று கூடுவதனை தவிர்க்குமா றும், கண்ணுக்கு தெரியாத வைரஸுடன் நடக்கும் யுத்தத்தை வெற்றிக்கொள் வதற்கு ஒத்துழைப்பு தருமாறும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் பொது மக்களிடம் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550

கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

கிருபா லேணர்ஸ்
கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS
தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960

அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்

★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி
வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

# கடன்களை அடைக்க அவகாசம் கேட்கிறார் ஜனாதிபதி கோட்டா

கொழும்பு, மார்ச் 26

கொரோனா வைரஸ் அச்சுறுத்தலுக்கு உள்ளாகக்கூடிய அதிக இடர்நிலைமை உள்ள அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் சர்வதேச நிதி நிறுவனங்களிடம் பெற்றுக் கொண்டுள்ள கடனை திருப்பிச் செலுத்துவதற்கு நிவாரணக் காலத்தை அல்லது கடனைப் பிற்போடும் வசதியை அளிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் ஊடகப் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்தரப்பு, இரு தரப்பு உதவி முகவர் நிறுவனங்களுக்கு இந்த கோரிக்கையை முன்வைக்குமாறு ஜனாதிபதி உலக சுகாதார நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் கேட்டுள்ளார்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு கொவிட் -19 சமூக இடைவெளி, பொதுமக்கள் சுகாதார, சமூக பாதுகாப்பு முறைமையை முகாமைத்துவம் செய்வதற்கு இந்த நிவாரணம் உதவும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# ஊரடங்கை நீடிப்பதற்கு அமைச்சரவையில் பேச்சு

கொழும்பு, மார்ச் 26

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தை நீடிக்க அமைச்சரவை நேற்று நீண்ட ஆலோசனைகளை நடத்தியுள்ளது.

அதேசமயம் ஊரடங்குச் சட்ட நேரம் அமுலில் இருந்தாலும் அத்தியாவசிய சேவைகளை தொடர்ச்சியாக வழங்குவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதியின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக் காலை நடந்தது. இதன்போது கொரோனா வைரஸ் தாக்கம் குறித்தும் அது பெருமளவில் கட்டுக்குள் வந்திருப்பது குறித்தும் ஜனாதிபதி அமைச்சர்களுக்கு விளக்கினார்.

இன்னும் சில வாரங்களில் இது முழு அளவில் கட்டுக்குள் கொண்டுவரப்படுமென ஜனாதிபதி இங்கு நம்பிக்கை வெளியிட்டார்.

ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டு ஒரே நேரத்தில் மக்கள் அணி திரள்வதால் வைரஸ் தொற்று பரவும் அபாயம் இருப்பதாக அமைச்சர்கள் இங்கு சுட்டிக்காட்டினார். அதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி சில மாவட்டங்களில் பகுதி பகுதியாக ஊரடங்கை அமுல்படுத்துவது பற்றி பாதுகாப்பு தரப்புடன் பேசப்படுமென குறிப்பிட்டார்.

புத்தாண்டு வருவதால் மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்குமென்பதால் அதற்குமுன்னர் இதனைக் கட்டுக்குள் கொண்டுவர அரசு அதிகபட்ச முயற்சிகளை எடுப்பதாக இங்கு பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த இக்கட்டான காலப்பகுதியில் மீனவர்கள் பிடிக்கும் மீன்களை கொள்வனவு செய்வதற்காக இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்கு 600 மில்லியன் ரூபாவை வழங்க அமைச்சரவை தீர்மானித்தது. அதேசமயம் வடக்கு கிழக்கில் இந்த நிலைமையால் பாதிக்கப்பட்டுள்ள ஏழை மக்களுக்கு துரித நிவாரணம் வழங்கப்படவேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இங்கு வலியுறுத்தியுள்ளார்.

நிவாரணப்பணிகளுக்காக இந்திய கடனுதவியின் ஒரு பகுதியை பயன்படுத்தவும் அமைச்சரவை உத்தேசித்துள்ளது.

தோட்டத்தொழிலாளர்களுக்கும் விசேட கொடுப்பனவு வழங்கப்படவேண்டுமென அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் இங்கு கோரியுள்ளார். ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை கம்பனிகளிடம் கோரினாலும் அவை 900 ரூபா வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் தொண்டமான் இங்கு குறிப்பிட்டுள்ளார். அந்த விடயம் குறித்து பேசி இறுதி முடிவை எடுக்க அமைச்சரவை தீர்மானித்தது .அத்துடன் தொழிலாளர்களுக்கு பண்டிகைக்கால முற்பணம் முற்கூட்டியே வழங்கப்பட கம்பனிகளை வலியுறுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

# கடலுணவு கொள்வனவுக்கு ஆறு கோடி ரூபா ஒதுக்கீடு

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மார்ச் 26

உள்ளூர் கடற்றொழிலாளர்களால் பிடிக்கப்படும் கடலுணவுகளை கடற்றொழில் கூட்டுத்தாபனம் ஊடாக கொள்வனவு செய்வதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்காக நாடுமுழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தால் கடற்றொழிலாளர்கள் தாம் பிடிக்கும் கடலுணவுகளை சந்தைப்படுத்துவதில் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருவதை கருத்தில் கொண்டு நேற்று இது குறித்த அமைச்சரவைப் பத்திரம் ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் அமைச்சரவையில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த அமைச்சரவை பத்திரத்தில் உள்ளூரில் பிடிக்கப்படுகின்ற கடலுணவுகளை கடற்றொழில் கூட்டுத்தாபனம் ஊடாக கொள்வனவு செய்வதற்கும் அதை கொள்வனவு செய்ய 6 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுசெய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் முன்வைத்த அந்த அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# திருகோணமலையில் போதகர் ஒருவர் குடும்பத்தாருடன் தனிமைப்படுத்தல்!

திருமலை, மார்ச் 26

அரியாலையில் சுவிஸ் போதகரால் நடத்தப்பட்ட ஆராதனையில் கலந்து கொண்ட போதகர் ஒருவர் குடும்பத்தாருடன் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

திருகோணமலை – உப்புவெளை, பள்ளத்தோட்டம் பகுதியில் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வி.பிரேமாநந்தன் தெரிவித்துள்ளார்.

போதகருடன் அவரின் மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார். இந்தப் போதகர் நேற்றுமுன்தினம் இரவு அடையாளங்காணப்பட்டுள்ளதுடன், அவர் தற்போது வரை உடல்நலத்துடன் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, அரியாலையிலிருந்து திரும்பியதும் இவருடன் தொடர்புகளைப் பேணியவர்கள் தொடர்பாக தற்போது ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார். (ஐ)





காலைக்கதிர் Kalaikathir

வீட்டுக்குள் வாழ்வு



16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கானது

தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

இன்று (26/03/2020) தலைப்பு
வீட்டுக்குள் வாழ்வு

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

- சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
- சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
- தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
- தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
- போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# பொருள்களின் விநியோகத்துக்காக வடக்கை வலயங்களாகப் பிரியுங்கள்

## டாக்டர் சத்தியலிங்கம் ஆளுநருக்கு ஆலோசனை



யாழ்ப்பாணம்,மார்ச்26

“வடக்கு மாகாணம் முழுவதும் சனத்தொகை மற்றும் புவியியல் அமைப்பு சார்ந்து வலயங்களாக பிரிக்கப்பட வேண்டும்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநருக்கு ஆலோசனை தெரிவித்திருக்கின்றார் வடக்கு மாகாணத்தின் முன்னாள் சுகாதார அமைச்சர் வைத்தியர் பத்மநாதன் சத்தியலிங்கம்.

’அர்த்தமற்ற ஊரடங்கும் அதன் பின்னரான சனநெரிசலும்’ என்ற தலைப்பில் ஆளுநருக்குத் தாம் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார். அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு: –

கொரோனா வைரஸ் நோயிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துவருவது பாராட்டிற்குரியது.

இலங்கையில் நோய் வந்தபின் காப்பதைவிட வருமுன் காப்பதே புத்திசாலித்தனமானது. ஏனெனில் கொரோனா வைரஸ் நோய் தாக்கத்தினால் மூச்சுத்திணறல் நிலை ஏற்படுமானால் எமக்குள்ள அவசர சிகிச்சை பிரிகளின் எண்ணிக்கை,அங்கு கடமையாற்றும் பயிற்றப்பட்ட சுகாதார ஊழியர்கள் மற்றும் ஏனைய வசதிகளை எடுத்து நோக்கினால் நாம் எதிர்கொள்ள இருக்கும் பேராபத்தை வெற்றிகரமாக எதிர்கொள்ளலாமா என்ற கேள்வி எழுகிறது. நிச்சயமாக விடைதேட முடியாது என்பதே உண்மை.

எனவே மக்கள் நலன்சார்ந்து அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளிற்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவது இன்றியமையாததாகின்றது.

ஊரடங்கின் அர்த்தம் புரிந்தும் புரியாதவர்களாக, ஊரடங்கை மீறுவது கெட்டிக்காரத்தனம் என நினைப்பவர்களும், ஊரடங்கு வேளைகளில் வெவ்வேறு அத்தியாவசியமற்ற காரணங்களைக் கூறிக்கொண்டு வீட்டைவிட்டு வெளிவருபவர்களும், ஊரடங்கு தளர்த்தப்பட்டதும் பொருள்களை வாங்கும் நோக்கில் முண்டியடித்துக்கொண்டு சுகாதார விதிகளை மீறி ஒன்றுசேருவதும், மக்களும் இந்தநாடும் இன்னும் தாங்கள் எதிர்நோக்கியுள்ள பாரிய அழிவை புரிந்து கொள்ளவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

எனவே ஆளுநர் சில நடைமுறைகளை உடனடியாக நடைமுறைபடுத்த வேண்டும் என மக்கள் நலன் சார்ந்து தயவாக கேட்டுக்கொள்கிறேன்.

1.வடக்கு மாகாணம் முழுவதும் சனத்தொகை மற்றும் புவியியல் அமைப்பு சார்ந்து வலயங்களாக பிரிக்கப்பட வேண்டும்.

2. ஒவ்வொரு வலயத்திலும் காணப்படும் தனியார் மற்றும் அரச விற்பனை நிலையங்களில் அத்தியாவசிய பொருள்களின் இருப்பை உறுதிப்படுத்த வேண்டும், அதாவதது, அங்கு வாழும் மக்கள் தொகைக்கேற்ப அத்தியாவசியப் பொருள்களின் கையிருப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

3. ஊரடங்கு தளர்த்தப்படும் வேளைகளில் பொலிஸாரின் உதவியுடன் சம்பந்தப்பட்ட வலயங்களில் வாழும் மக்கள் அந்தந்த வலயங்களிலேயே பொருள்கள் கொள்வனவில் ஈடுபடுகின்றமையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

4.அவசர மருத்துவ நிலைகளிலும் ஏனைய அவசர சந்ததர்ப்பங்களிலும் மட்டும் குறிப்பிட்ட வலயங்களில் இருந்து மக்கள் வெளியேறுகின்றமையை உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறான மக்கள் நலன்சார் நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதால.

1. நோய்ப் பரம்பலைக் குறிப்பிட்ட வலயத்தினுள் கட்டுப்படுத்துவதுடன் தடுப்பு நடவடிக்கைகளை இலகுபடுத்த முடியும்.

2. ஊரடங்கு தளர்த்தப்படும் சந்தர்ப்பங்களில் அநாவசியமாக மக்கள் ஒன்றுகூடுவதைக் கட்டுப்படுத்தி நோய்ப்பரம்பலை கட்டுப்படுத்தலாம்.

மேற்படிவிடயங்களைக் கவனத்தில் எடுத்து கொடிய நோயிலிருந்து மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

– என்று உள்ளது.

## வீரகெட்டிய பகுதியில் நேற்றிரவு துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

வீரகெட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று இரவு 8 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் பலத்த காயமடைந்த நபர் வீரகெட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

வேகந்தவள பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் வீரகெட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஊரடங்கிலும் போதையில் அட்டகாசம் செய்த கும்பல்

### நோர்வூட் பஸ் நிலையத்தில் அடாவடி





நேற்று முன்தினம் இரவு 9 மணி அளவில் – ஊரடங்கு வேளையில் – மதுபோதையில் இனந்தெரியாத குழு ஒன்று நோர்வூட் நகரில் உள்ள பிரதான பஸ் நிலையத்தில் நான்கு பக்கமும் சுற்றி பொருத்தப்பட்டிருந்த கண்ணாடிகளைச் சேதமாக்கிவிட்டுத் தப்பி சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தபட்டிருந்த வேளை பொதுச் சொத்துகளுக்கு மது போதையில் வந்த குண்டர்கள் குழு சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. அக்குழுவினரைக் கைது செய்ய விரட்டி சென்ற போதும் அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் எனவும் தப்பி சென்றவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கையை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இக்குழுவினர் நோர்வூட் மற்றும் பொகவந்தலாவப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் விதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் – இல, 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி – இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.03.2020 இல் வெளியிடப்பெற்றது.